TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075264

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : திருவாரூர் PS: காவல்நிலையம் : V&AC Year: ஆண்டு : 2021 FIR No.: மு.த.அ. எண் : 03/2021 Date: நாள் : 24-02-2021

2. (i) Act சட்டம்: U/S 7 of prevention of corruption Act 1988 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: as amended on 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் : D/o. — Date to : நாள் வரை : 23-02-2021 16.45 hrs
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — Time : நேரம் : Report – 24.02.21 07.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம் : FIR – 24-02-21 09.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : கிழக்கு 2½ k.m
Beat Number : முறைக் காவல் எண் : 
(b) Address : முகவரி : Head post office, மயிலாடுதுறை மெயின்ரோடு, திருவாரூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : District : மாவட்டம் :

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : P. குமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : பக்கிரிசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 1969
(d) Nationality : நாட்டினம் :
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
Date of Issue : வழங்கப்பட்ட நாள் :
Place of Issue : வழங்கப்பட்ட இடம் :
(f) Occupation : தொழில் :
(g) Address : முகவரி : No. 5/3, கீழத்தெரு, மேனாங்குடி (PO), பேரளம், நன்னிலம் தாலுக்கா திருவாரூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
A1. திருமதி. லட்சுமி பிரபா, தாசில்தார், நன்னிலம் தாலுக்கா, A2 திரு. [illegible], நன்னிலம் தாசில்தார் டிரைவர், நன்னிலம் தாலுக்கா அலுவலகம் திருவாரூர் (மா)

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது:

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி.R.தமிழ்செல்வி ஆகிய நான் 24.02.2021ம் தேதி 07.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.P.குமார் என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் P.குமார், த/பெ. பக்கிரிசாமி, 5/3, கீனாங்குடி, மேனாங்குடி (Po), பேரளம், நன்னிலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா. நான் எனது குடும்பத்துடன் பேரளம் கீனாங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் 10வது வரை படித்துள்ளேன். நான் நன்னிலம் தாலுக்கா லாரி உரிமையாளர் சங்கத்தின் தலைவராகவும், திருவாரூர் மாவட்ட அளவில் துணை செயலாளராகவும் உள்ளேன். நான் சொந்தமாக 4 லாரிகள், 1 JCB, 1 HITACHI ஆகியவை வைத்துள்ளேன். எங்கள் லாரிகளில் கரூரிலிருந்து M Sand வாங்கி வந்து இங்கு விற்பணை செய்வது வழக்கம். கடந்த 15 நாட்களுக்கு முன்பு இதுபோல் எனது லாரியில் M Sand வாங்கி வந்தபோது கங்களாஞ்சேரி அருகில் நன்னிலம் தாசில்தார் மேடம் லெட்சுமிபிரபா அவர்கள் வண்டியை மறித்து லாரியின் சாவியையும், பர்மிட்டையும் பிடுங்கி சென்று விட்டார்கள். அது தொடர்பாக அவர்களை பார்த்து பர்மிட்டுடன் வந்த லாரியை ஏன் பிடித்தீர்கள் என்று கேட்கவும், லாரியின் சாவியையும்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/02/2021 24-02-2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

FIR Court 12.00

Name: பெயர் இரா.தமிழ்செல்வி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்
VSAC, திருவாரூர்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

Continue of FIR in Cr.No 03/2021..........

பர்மிட்டையும் கொடுத்துவிட்டார்கள். ஆனால் மறுநாள் ரூ.10,000/- கொண்டுவந்து கொடுக்க சொல்லியிருந்தார்கள். நான் லாரி சாவியையும், பர்மிட்டையும் வாங்கி வந்துவிட்டதால் அவர்களை திரும்ப போய் நான் பார்க்கவில்லை.) 22.02.2021-ந் தேதி இரவு கரூரில் M Sand ஏற்றிவந்த எனது லாரி TN82A6628 வாகனத்தை நேற்று 23.02.2021-ந் தேதி காலை 09.30 மணியளவில் சொரக்குடி அய்யனார் கோவில் அருகில் வந்த போது நன்னிலம் தாசில்தார் மேடம் லெட்சுமிபிரபா அவர்கள் வண்டியை மறித்து லாரியின் சாவியையும், பர்மிட்டையும் பிடுங்கி சென்று விட்டார்கள் என்று எனது லாரி டிரைவர் சொல்லி எனக்கு தகவல் தெரிய வந்தது. காலை 10.00 மணியளவில் தாசில்தார் மேடம் அவர்களின் ஜீப் டிரைவர் லெனின் என்பவர் எனது செல்போனில் அடித்துள்ளார். 4 மிஸ்டுகால் இருந்தது. அதனால் நான் அவரை தொடர்பு கொண்ட போது அவர் மேடம் உங்க வண்டியை மறித்து சாவியையும், பர்மிட்டையும் எடுத்துவந்துள்ளார்கள். போனவாட்டியே பணம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டீர்கள் என்று கோவமாக உள்ளார்கள், உங்களை நேரில் வரசொல்லியுள்ளார்கள் என்று சொன்னார். நான் எனது இரண்டு லாரிகளுக்கு இன்று FC போடும் வேலை திருவாரூரில் இருப்பதால் அதை முடித்துவிட்டு வந்து மேடத்தை பார்க்கிறேன் என்று சொன்னேன். நேற்று இதுசம்மந்தமாக திருவாரூரில் இருந்த போது மாலை 4.00 மணியளவில் மீண்டும் டிரைவர் என்னிடம் செல்போனில் பேசி, தாசில்தார் மேடம் திருவாரூர் வந்திருக்கிறார்கள், போஸ்டு ஆபீசில் உள்ளோம். அங்கு வாருங்கள் என்று சொன்னார். நேற்று மாலை 4.30 மணியளவில் எந்த போஸ்டு ஆபீஸ் என்று அவரிடம் செல்போனில் விபரம் கேட்ட போது பழைய பஸ்டான்டு மார்கெட்டில் உள்ள போஸ்டு ஆபீஸ்க்கு வரசொன்னார். அதனால் நேற்று மாலை 4.45 மணியளவில் அங்கு நான் சென்ற போது போஸ்டு ஆபீசில் தாசில்தார் மேடம் லெட்சுமிபிரபா மற்றும் டிரைவர் இருந்தார். நிறைய தபால்கள் அனுப்புவதற்கு கையொப்பம் செய்து கொண்டிருந்தார். என்னை பார்த்தஉடன் போனமுறை பணம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டீர்கள், வேண்டுமென்றுதான் உங்கள் லாரியை பிடித்தேன். இப்போது பணம் கொடுக்காமல் ஏமாற்றமுடியாது என்று கூறினார். நான் பர்மிட் போட்டு M Sand லாரியில் ஏற்றிவந்துள்ளேன். இதற்கு என்ன வழக்கு போடமுடியும். இதற்க்கெல்லாம் பணம் கேட்கிறீர்களே, நாங்கள் உள்ளூர்காரர்கள்தானே விடுங்கள் என்றேன். அதற்கு தாசில்தார் மேடம் வெளியூர்காரர்கள் என்றால் எங்களுக்கு பிரச்சனை இல்லை. வண்டியை பிடித்தவுடன் உடனே பணத்துடன் வந்து நிற்பார்கள். ஆனால் நீங்கள் ஏமாற்றிவிட்டு போய்விட்டீர்கள். இந்தமுறை பணம் கொடுத்தால்தான் சாவியையும், பர்மீட்டையும் தருவேன் என்று கூறினார்கள். நான் எவ்வளவு பணம் என்று கேட்டேன். அதற்கு நீங்கள் போஸ்டு ஆபீஸ் வெளியே நில்லுங்கள், டிரைவரிடம் சொல்லிவிடுகிறேன் என்று கூறினார்கள். அதனால் நான் போஸ்டு ஆபீஸ் வெளியே காத்திருந்தேன். தாசில்தார் மேடத்தின் டிரைவர் கொஞ்ச நேரத்தில் வெளியே வந்து தாசில்தார் அம்மா ரூ.10,000/- கொண்டுவரச்சொல்கிறார், நீங்கள் ரூ.8,000/- கொண்டுவாருங்கள் போதும் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறினார். நான் வண்டி சாவி யாரிடம் உள்ளது என்று கேட்டேன். அதற்கு டிரைவர் வண்டிசாவி மற்றும் பர்மீட் மேடம் ஜீப்பில் வைத்துள்ளார்கள் என்று கூறினார். நான் நாளை வருவதாக கூறிவிட்டு வந்துவிட்டேன். தாசில்தார் மேடம் எனது லாரியின் சாவியை மற்றும் பர்மீட்டை தருவதற்கு ரூ.8,000/- லஞ்சமாக கேட்கும் பணத்தை எனக்கு கொடுக்க விருப்பம் இல்லை. நான் இத்துடன் M Sand ஏற்றிவந்ததற்கான (Invoice) நகல் மற்றும் வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். தாசில்தார் லெட்சுமி பிரபா மற்றும் அவரது வாகனத்தின் டிரைவர் லெனின் ஆகியோர் கேட்ட ரூ.8,000/- லஞ்ச பணத்தை ஏற்பாடு செய்து எடுத்து வந்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்ட மேற்படி தாசில்தார் லெட்சுமி பிரபா மற்றும் அவரது வாகனத்தின் டிரைவர் லெனின் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். Sd (P.குமார்) 24/2/2021... அய்யா மேற்படி புகாரை இன்று 24.02.2021-ந் தேதி காலை 07.00 மணியளவில் பெற்றும், மனுதாரர் எதிரிகள் குறித்தும் இரகசிய விசாரணை செய்தும், இந்த புகார் மீது இன்று 24.02.2021-ந் தேதி

Continue of FIR in Cr.No 03/2021..........

காலை 09.30 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 03/2021 ச/பி 7 of Prevention of Corruption Act 1988 as amended 2018-ன் படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. Sd (R.தமிழ்ச்செல்வி) 24.02.2021 Inspector of Police, V&AC, TVR.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

24.02.2021
Inspector of Police
V&AC, திருவாரூர்.